அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2011

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# விசேட எழுத்தறிவுப் போட்டி

## விசேட இளைஞர் பிரிவு
(15-17 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

அ) எதிர்ச் சொற்களை எழுதுக- (புள்ளிகள் 10)

1 அண்மை ------------------------------------------------
2 வீரன் ------------------------------------------------
3 அறம் ------------------------------------------------
4 இணக்கம் ------------------------------------------------
5 வள்ளல் ------------------------------------------------
6 எளிது ------------------------------------------------
7 குறை ------------------------------------------------
8 ஏற்றம் ------------------------------------------------
9 கொடுத்தல் ------------------------------------------------
10 இசை ------------------------------------------------

| புள்ளிகள் | |
|---|---|

ஆ) பிரித்து எழுதுக. (புள்ளிகள் - 10)

1 கற்கோயில் -------------------- + -------------------
2 பலாவிலை -------------------- + -------------------
3 தண்ணிலவு -------------------- + -------------------
4 பற்பல -------------------- + -------------------
5 காட்டரன் -------------------- + -------------------
6 பொற்றகடு -------------------- + -------------------
7 வட்டவடிவம் -------------------- + -------------------
8 தேர்ச்சில் -------------------- + -------------------
9 இன்றுவரை -------------------- + -------------------
10 மரவேர் -------------------- + -------------------

| புள்ளிகள் | |
|---|---|

இ) கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான வசனங்களை அமைக்குக. (புள்ளிகள் - 10)

1 என்று / கடவுள் / சொல்பவனை / உண்டு / கொள்கை/ என்ற / உடையவரை / ஆத்திகர் / கூறுவர்

---------------------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------------------

2. இருண்டு / வெளியே / இருளைப் / அவள் / போல / இருந்தது / சூழ்ந்திருந்த / மனமும்

---------------------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------------------

3. எதிரிகளாகக் / உண்மையான / மோகமும் / பதவி நிம்மதிக்கு / மிதமிஞ்சிய / மன / பணமும் / இரு / /கருதப்படுகின்றன. /

---------------------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------------------

4. ஏட்டுச் /அநுபவத்தோடு/ அறிவை / கூடாத / கல்வி / சுரைக்காயொடு / ஒப்பிடுவர்.

---------------------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------------------

5. தொட்டிலிற் / சுடுகாடு / ஆகும். / என்பது / பழமொழி / பழக்கம் /மட்டும் / ஒரு/

---------------------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------------------

| புள்ளிகள் | |
|---|---|

**( உ )** கீழே தரப்பட்ட சொற்களின் பொருள் விளங்கும்வண்ணம் அவற்றைப் பாவித்து வாக்கியங்கள் அமைக்கவும். (புள்ளிகள் - 20)

1. களை------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

2. கழை------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

3. சூல்------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

4. சூழ்------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

5. பொலிதல் ------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

6. பொழிதல்------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

7. தழை ------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

8. தளை------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

9. கிழி ------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

10. கிளி------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------

| புள்ளிகள் | |
|---|---|

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2011

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

**இளைஞர் பிரிவு**
(15-17 வயதுப் பிரிவு)
காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

(ஈ) ஒவ்வொரு கேள்விக்கும் கீழே தரப்பட்டுள்ள 4 சொற்களிலும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து வசனத்தைப் பூர்த்தி செய்யவும்.
(புள்ளிகள் - 10)

1 மழை கடுமையாகப்---------------------------------------------
குவீன்ஸ்லன்ட்டில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.
(பொழிவதால் / பொழிந்ததால் / பொழியப் போவதால் / பொழியாததால்)

2 கடுமையாகத் தவம் செய்த முனிவர் முக்காலமும் அறியும் ஆற்றலைப் ----------------------------------- மிகவும் பிரசித்தி பெற்று விளங்கினார்.
( பெறாததால் / பெறப்போவதால் /பெற்றதால் / பெறவரமிருந்ததால் /

3 நீ கெட்டிக்காரனாய் -------------------------------------------- ( ஆனபடியாலும் / என்றாலும் / இருந்தாலும் / உயர்ந்ததனால்) உனது ஆணவத்தினால் உன்னை ஒருவரும் மதிப்பதில்லை.

4 விடாமுயற்சி உடையவர்கள் தோல்வி அடைந்தாலும் மனச்சோர்வடையாது ஒரு காலத்தில் வெற்றி ---------------------------------என்பது உண்மையாகும்.
( பெறமாட்டார்கள் / பெறத்தவறிவிடுவார்கள் / ஈட்டிடுவார்கள் / எடுக்கமாட்டார்கள் )

5 பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது ஒரு ------------------------------------------------------------ ( கூற்று / கவிதையின் வரி / / பழமொழி / உதாரணம். /

| புள்ளிகள் | |
|---|---|

இந்தக் கவிதையை வாசித்தபின் கீழே தரப்பட்டுள்ள கேள்விகளுக்குத் தக்க பதில்களைத் தருக.

(புள்ளிகள் - 10)

**"அறமொன் றேதரும் மெய்யின்பம் என்றநல்**
**லறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்**
**பிறவி ரும்பி உலகினில் யான்பட்ட**
**பீழை எத்தனை கோடி! நினைக்கவும்**
**திறன ழிந்தென் மனமுடை வெய்துமால்**
**தேசத் துள்ள இளைஞர் அறிமினோ?**
**அறமொன் றேதரும் மெய்யின்பம்! ஆதலால்**
**அறனை யேதுணை யென்றுகொண் டுய்திரால்**

**வெய்ய கர்மப் பயங்களில் நொந்துதான்**
**மெய்யு ணர்ந்திட லாகு மென்றாக்கிய**
**தெய்வ மே!இது நீதி யெனினும்நின்**
**திருவ ருட்குப் பொருந்திய தாகுமோ?**
**ஐய கோ!சிறி துண்மை விளங்குமுன்**
**ஆவி நையத் துயருறல் வேண்டுமே!**
**பையப் பையவோர் ஆமைகுன் றேறல்போல்**
**பாருளோர் உண்மை கண்டிவண் உய்வரால்."**

கேள்விகள் -

1 கவிஞர் எதற்காக எவரை அனுதினம் போற்றுவேன் என்கிறார்?

-----------------------------------------------------------------------------------------------------------

2 உலகத்தில் வாழ்பவர்கள் உண்மையை அறிவதற்கு என்ன உதாரணத்தைக் கவிஞர் கூறுகிறார்?

-----------------------------------------------------------------------------------------------------------

3 இப் பாடலில் மேலோங்கி உள்ள உணர்ச்சி யாது?

-----------------------------------------------------------------------------------------------------------

4 மெய்யை உணர்வதற்குமுன் எதனை அனுபவிக்கவேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

-----------------------------------------------------------------------------------------------------------

5 "யான்பட்ட பீழை எத்தனை கோடி!" இந்த வரியை விளக்குக?

-----------------------------------------------------------------------------------------------------------

எ) **கட்டுரை** – கீழே தரப்பட்ட 3 வினாக்களில் ஒன்றிற்கு விடை அளிக்கவும். விடை 200 சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். (புள்ளிகள் - 30)

1) சமீபத்தில் உங்களின் அல்லது உங்கள் பெற்றோரின் தாய் நாட்டிற்குச் சென்று விடுமுறையைக் கழித்தபின் உங்கள் வதிவிடத்திற்குத் திரும்பிய நீங்கள் தாய் நாட்டில் தங்கியிருந்தபொழுது உங்கள் மனதைக் கவர்ந்தவற்றைக் குறித்து உங்கள் நெருங்கிய உறவினருக்கு ஒரு கடிதம் எழுதுக..

2) முகப் புத்தகம் (Face Book) என்னும் இணையத் தளமாகிய ஊடகத்தைப் பாவிப்பதால் இளவயதினருக்கு ஏற்படும் நன்மை தீமைகளை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

3) அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ்ப் பாடசாலையில் தமிழ் கற்கும்பொழுது இருந்த தமிழ் அறிவும் தமிழைக் கற்றவேண்டுமென்ற ஆர்வமும் அப்பிள்ளைகள் பல்கலைக்கழகம் சேர்ந்தபின்பு குறைவடைவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பல்கலைக்கழகத்திற் கல்விகற்கும் தமிழ்ப் பிள்ளைகளில் ஏற்படும் இந்த மாற்றத்திற்கான தன்மையை ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுதுக.

| | |
|---|---|
| **புள்ளிகள்** | |

| | |
|---|---|
| **மொத்தப் புள்ளிகள்** | |